# சமூகப் பாதுகாப்புத்துறை
# மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு
# திருவண்ணாமலை

## பத்திரிக்கைச் செய்தி

திருவண்ணாமலை மாவட்டத்தில் சமூக பாதுகாப்பு துறையின் கீழ், மாவட்ட இளைஞர் நீதிக்குழுமம் 2012 முதல் செயல்பட்டு வருகிறது. இந்த அலுவலகத்தில் காலியாக உள்ள 2 உறுப்பினர்கள் பணியிடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் நிரப்புவதற்காக கீழ்கண்ட தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது.

குழந்தைகள் தொடர்பான உடல் நலம், கல்வி அல்லது குழந்தைகளுக்கான நலப்பணிகளில் குறைந்தது 7 ஆண்டுகள் முனைப்புடன் ஈடுபாடு கொண்டவர் அல்லது குழந்தை உளவியல் அல்லது மனநல மருத்துவம் அல்லது சட்டம் அல்லது சமூக பணி அல்லது சமூகவியல் அல்லது மனித மேம்பாடு ஆகியவற்றில் ஏதேனும் பட்டம் பெற்ற தொழில் புரிபவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் நபர்கள் 35 வயதுக்கு குறையாதவராகவும், 65 வயதைப் பூர்த்தி செய்யாதவராகவும் இருத்தல் வேண்டும்.

எனவே, தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், தாலுக்கா அலுவலக வளாகம், திருவண்ணாமலை, 606601, போன்: 04175 223030 என்ற முகவரியில் விண்ணப்பங்கள் பெற்று விளம்பரம் வெளியான 15 நாட்களுக்குள் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருவண்ணாமலை.